பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 216** **நாள் : 28.12.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் அம்ரூத் திட்டத்தின் கீழ் நீர்நிலைகளை புனரமைத்தல், நிலத்தடி நீர்மட்டத்தினை அதிகரித்தல் தொடர்பான ஆய்வுக்கூட்டம் ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள நீர்நிலைகளை புனரமைத்தல், நிலத்தடி நீர்மட்டத்தினை அதிகரித்தல் போன்ற பணிகளை அம்ரூத் திட்டத்தின் கீழ் (Atul Mission for Rejuvenation and Urban Transformation(AMRUT)) மேற்கொள்வது குறித்த ஆய்வுக்கூட்டம் ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 27.12.2018 அன்று ரிப்பன் மாளிகை கூட்டரங்கில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி 210 நீர்நிலைகளை புனரமைக்கும் பணி மேற்கொண்டுள்ளது. இதில் 63 நீர்நிலைகளை புனரமைக்கும் பணி சென்னை சீர்மிகு நகர நிதியில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்த பணிகள் மூலம் நீர்நிலைகளின் அருகில் உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் அதிகரிக்கும். மேலும், இதனால் ஆக்கிரமிப்புகளும் தவிர்க்கப்படும்.

அம்ரூத் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு நீர்நிலைகளை புனரமைக்கும் பணிக்கு ரூ.330 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் அனைவருக்கும் முன்னோடியாக 2016லிருந்து நீர்நிலைகளை சீரமைக்கும் மற்றும் புனரமைக்கும் திட்டங்களை செயல்படுத்தி வரும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நீர்நிலைகளை புனரமைக்கும் பணிக்கு ரூ.70 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**அம்ரூத் திட்டத்தின் கீழ் 1 ஹெக்டேர் பரப்பளவுடைய நீர்நிலைகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். குறிப்பாக நீர்நிலைகளை தூர்வாரி ஆழப்படுத்துதல், நீர்நிலைகளுக்குள் வராமல் கழிவுநீரை திசை திருப்புதல், கழிவுநீரினை திசை திருப்ப இயலாத நேர்வுகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், நீர்நிலைகளின் கரைகளை பலப்படுத்துதல், குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் நடைபாதை அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.**

இக்கூட்டத்தில் ஆணையாளர் அவர்கள், நீர்நிலைகளில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் போது ஆக்கிரமிப்புகளை அகற்றி அவர்களை மறுகுடியமர்வு செய்து மறுவாழ்வு அளிக்கவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்கள். மேலும், வில்லிவாக்கம் குளத்தினை சீரமைக்கும் பணியினை விரைந்து முடிக்கவும் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் துணை ஆணையர் (பணிகள்) திரு.எம்.கோவிந்தராவ், இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையர் திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, மேற்பார்வை பொறியாளர் (மழைநீர் வடிகால்) திரு.எல்.நந்தகுமார், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், பொதுப்பணித்துறை, இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சுரங்கங்கள் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**